**செய்தி வெளியீடு எண் : 1469** **நாள் : 25.08.2022**

**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்**

நடப்பு கே.எம்.எஸ் 2021 – 2022 பருவத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல்லானது சேமிப்புக் கிடங்குகள் மற்றும் திறந்தவெளி சேமிப்பு மையங்களில் இருப்பு வைக்கப்பட்டு அரவை ஆலைகளுக்கு இயக்கம் செய்யப்பட்டு வருகிறது. திறந்தவெளி நெல் சேமிப்பு மையங்களில் வைக்கப்பட்டுள்ள நெல் மூட்டைகள் அனைத்தும் தார்பாய்கள் கொண்டு மூடப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டம், கொத்தங்குடி திறந்தவெளி நெல் சேமிப்பு நிலையத்தில் சுமார் 6,933 மெ.டன் நெல் இருப்பு வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது. மழையினால் நெல் மூட்டைகள் நனைந்து விட்டது என்று சில பத்திரிக்கைகளில் செய்தி வரப்பெற்றதை தொடர்ந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தஞ்சாவூர் முதுநிலை மேலாளர் (தரக்கட்டுப்பாடு) அவர்கள் கொத்தங்குடி திறந்தவெளி சேமிப்பு மையத்தை 24.08.2022 அன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஏற்கனவே அங்கு திறந்த வெளியிலிருந்த நெல் மூட்டைகள் சரியான முறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்ததாகவும் முதல் நாள் பெய்த மழையில் ஏதும் நனையவில்லை என்றும் தெரிய வந்தது. இம்மையத்தில் ஒரு அட்டியில் மட்டும் உள்ள நெல் மூட்டைகள் சரிந்து விட்டதால் அதனை உடன் சரி செய்து தார்பாலின் கொண்டு பாதுகாப்பாக மூடி வைக்கப்பட்டது. கொத்தங்குடி திறந்தவெளி நெல் சேமிப்பு நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள நெல் மூட்டைகளுக்கு மழையினால் எவ்வித பாதிப்பும், இழப்பும் இல்லை என்பதோடு சேமிப்பு மையத்தில் வைக்கப்பட்டுள்ள 64 அட்டிகளும் (6,933 மெ.டன்) கருப்பு பாலித்தின் கவர் கொண்டு மூடி சுற்றிலும் கயிறு கட்டி பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் நெல் மூட்டைகள் அனைத்தையும் பாதுகாப்பாக வைக்க தார்பாய்கள் தயார் நிலையில் போதிய எண்ணிக்கையில் உள்ளன. திறந்தவெளி சேமிப்பு கிடங்குகள் அனைத்தையும் ஆய்வு செய்து நெல் மூட்டைகளைப் பாதுகாக்கவும், நெல் மூட்டைகளை அரவைக்கு துரிதமாக அனுப்பவும் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுத் துறையால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. இன்று (25.08.2022) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களும், கொத்தங்குடி திறந்தவெளி சேமிப்பு மையத்தை நேரில் ஆய்வு செய்து இங்குள்ள நெல் மூட்டைகளுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளார்.

வருங்காலங்களில் நெல் மூட்டைகளை மழையிலிருந்து பாதுகாக்கவும் இது போன்று புகார் மற்றும் செய்திகள் வராமல் தடுக்கவும் மேற்கூரையிட்ட சேமிப்புக் கிடங்குகள் துறையால் கட்டப்பட்டு வருகிறது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in